# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 53 International Editor : MICHAEL. W. SMITH இதழ் - 53


## ஓர் பெரிதான அழைப்பு அநேகர் அழைக்கப்பட்டிருந்தார்கள்

கிறிஸ்து கூறிய உவமை – மத் 22 : 1 – 14 ல் சொல்லப்பட்டுள்ளது

இரட்சிப்புக்கேற்ற தேவனுடைய பெரிதான அழைப்பை குறித்து வலியுறுத்தும்படி ஒரு கலியாண விருந்து குறித்த உவமையை இயேசு கூறினார். பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணச் செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களை கலியாணத்திற்கு வர சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான். அவர்களோ வர மனதில்லா திருந்தார்கள். அவன் வேறு ஊழியக்காரனை அழைத்து கலியாணத்திற்கு என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன் எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்கு சொல்லுங்கள் என்று அனுப்பினான். அழைக்கப்பட்டவர்களில் ஒவ்வொருவரும் வர மறுத்து பற்பல வேலை காரணங்களை சொல்லி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்திற்கும் போய்விட்டார்கள். மற்றவர்கள் அவன் ஊழியக்காரரை பிடித்து அவமானப்படுத்தி கொலை செய்தார்கள். இந்த அநீதியை ராஜா கேள்விப்பட்டு கோபமடைந்து தன் சேனைகளை அனுப்பி அந்த கொலை பாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்.

மேலும் ராஜா தான் ஊழியக்காரரை நோக்கி கலியாண விருந்து ஆயத்தமாய் இருக்கிறது அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரமாய் போனார்கள்.

அவர்கள் வழி சந்திகளிலே போய் காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றான். அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழியிலே போய் தாங்கள் கண்ட நல்லார், பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள் கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்தது.

விருந்தாளிகளை பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்த போது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு சிநேகிதனே நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான். ராஜா தன் பணிவிடைக் காரர்களை நோக்கி இவனை கையும் காலுமாய் கட்டிக் கொண்டு போய் அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்.

அந்தபடியே அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்று கூறி தன் உவமையை இயேசு முடிக்கிறார். கலியாண விருந்துக்கு வாருங்கள் இந்த உவமை வேத சத்தியத்திற்கு ஆழமான அஸ்திபாரம். தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படியாக பாவத்திலிருந்து விடுதலை பெரும்படியாக தேவனுடைய அழைப்பு வருகிறது. முதலாவது இந்த அழைப்பு யூதர்களுக்கும் யூத மார்க்கத்தவர்களுக்கும் மாத்திரம் தரப்படுகிறது ஆனால் அவர்களோ இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள மறுத்து மனம் திரும்பி நன்மையை சுதந்தரித்துக் கொள்ள தரப்பட்ட வாய்ப்பை நிராகரித்துவிட்டனர். ஆகவே இந்த இரட்சிப்பின் நற்செய்தியானது புறஜாதியாருக்கு சொல்லப்படுகிறது. எல்லா ஜாதி, கோத்திரம், மொழியை சேர்ந்த எல்லா தேசத்தாருக்கும் தேவன் இரட்சிப்பை தர வல்லவராய் இருக்கிறார். வாருங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் மனம் திரும்பி கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கப்பட்டு தேவனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்.

கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களில் அநேகர் அந்த அழைப்பை அசட்டை பண்ணினார்கள். அவர்கள் தங்கள் வேலைக்கு முக்கியத்துவம் கொடுத்து, தேவனை மறந்து போனார்கள். இந்த உலகத்தின் பணம், இவ்வுலக இன்பம், கல்வி, பொழுதுபோக்கு களுக்காக சுவிசேஷ அழைப்பை மறந்து விட்டார்கள். அநேகர் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்யும்படி துணிந்து விட்டனர்.




**கலியாண விருந்துக்கு வாருங்கள் இந்த உவமை வேத சத்தியத்திற்கு ஆழமான அஸ்திபாரம். தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படியாக பாவத்திலிருந்து விடுதலை பெறும்படியாக தேவனுடைய அழைப்பு வருகிறது**


| தலையங்கம் | வேதபாட வழிகாட்டி தெரிந்து கொள்ளப்படுதலும் சுதந்திரமும் | கிருபையினாலே உண்டாகும் தெரிந்து கொள்ளப்படுதல் | கேள்வி பதில் எவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் | ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை அழைப்பை ஏற்றுக்கொள்ளுதல் தேவன் இன்னும் உங்களை அழைக்கிறார் |
|---|---|---|---|---|
| 3 | 4 | 5-6 | 7 | 8 |

# வேதாகமம்,



## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21;
மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23,
1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4,
எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16;
தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6;
1 கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28;
வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30;
1 கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3;
1 கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2:9-10; 1 கொரி 11 :14-15;
உபா 22 :5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 :28,29;
2 கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5 :19;
2 கொரி 3 :17

**சுவிசேம் அறிவித்தல்**
மாற் 16:15

சுவிசேஷத்தின் அழைப்பு எல்லா ஜனங்களுக்குமானது. ஒருவராகிலும் தவறவிடக்கூடாது. ராஜா எவ்வாறு தன் குமாரனுடைய கலியாண விருந்துக்கு எல்லாரும் வரவேண்டும் என்று விரும்பினாரோ, அதேபோலவே கர்த்தராகிய தேவனும் இன்று எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்.

வரப்போகிற வாழ்வும், இப்போது நீங்கள் வாழ்கிற வாழ்விலும் ஒரு பரிபூரணத்தை தரவே உங்களை அழைக்கிறார். கலியாணம் என்பதில் உடையும் நேர்த்தியான ஒன்றாக இருக்க வேண்டும். இயேசுவின் நாட்களில் கலியாண வஸ்திரம் என்பது வழக்கமாக ஒவ்வொரு வீடுகளிலும் கொடுக்கப்படுகிற ஒன்று. அவர்கள் தங்களுடைய சொந்த வஸ்திரங்களை அணிந்து வந்து அமர மாட்டார்கள்.
தேவன் தம்முடைய அழைப்புக்கு செவி சாய்கிற ஒவ்வொருவருக்கும் நீதியின் சால்வையை தரிப்பிக்க வல்லவராய் இருக்கிறார்.



நம்முடைய சுயநீதி என்பது சரியான வஸ்திரம் அல்ல இரட்சிப்பு என்னும் ஏற்ற வஸ்திரத்தை மாத்திரமே தரிக்க வேண்டும் அது கிறிஸ்துவால் மட்டுமே நமக்கு தர இயலும்.
இந்த இரட்சிப்பை பெற்றுக் கொள்ள தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு செவி சாய்க்க வேண்டும். சபையிலும், சபை ஐக்கியத்திலும் பங்கு பெறுவது மாத்திரம் போதாது நாம் இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்திக் கொள்ள வேண்டும்.
ஆகவேதான் அந்த உவமையில் பேசாதிருந்த ஒரு மனிதனை காணமுடிகிறது. அங்கே போக்கு சொல்ல இடமில்லை. அங்கே அவனுக்கு வஸ்திரம் கொடுக்கப்படும் அதை அவன் ஏற்க மறுத்துள்ளான் முடிவு நித்திய ஆக்கினை. அழுகையும் பற்கடிப்பும் உள்ள இடத்திற்கு கொண்டு செல்லப்படுகிறான்.

**நம்முடைய சுயநீதி என்பது சரியான வஸ்திரம் அல்ல இரட்சிப்பு என்னும் ஏற்ற வஸ்திரத்தை மாத்திரமே தரிக்க வேண்டும் அது கிறிஸ்துவால் மட்டுமே நமக்கு தர இயலும்.**

தேவன், இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒருவரையும் கட்டாயப்படுத்துவதில்லை. ஆனாலும் அழைப்பு எல்லோருக்குமானது. சிலர் அசட்டை பண்ணுகிறார்கள் சிலர் தாமதப்படுத்துகிறார்கள். அநேகர் தங்களுடைய சுய வழிகளை கைக்கொண்டு தேவனுடைய பரிசுத்த வழிகளை மறந்து போகிறார்கள். உவமையில் சொல்லப்பட்டபடியே எல்லாரும் அழைக்கப்பட்டார்கள். தேவனுடைய கட்டளைகளை ஏற்றுக்கொள்ள மனதில்லாதவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை சுதந்திரத்துக் கொள்ளும்படி தெரிந்துகொள்ளப்படவில்லை. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு இம்மையிலும் மாத்திரமல்ல மறுமையிலும் ஆசீர்வாதங்களை தெரிந்து கொள்ள பாத்திரவான்கள்.

அழைப்பை ஏற்று கலியாண வஸ்திரத்தை தரித்துக்கொள்ள வேண்டும். அழைப்பு எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டு இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்திக் கொள்வோர் சிலரே. இயேசு கூறுகையில் அழைக்கப்பட்டவர்களோ அநேகர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர். தேவன் அதை கொடுக்காமல் நிறுத்தி வைக்கவில்லை. தேவனுடைய கிருபையினாலே தேவனுடைய வரங்கள் யாவருக்கும் அருளப்பட்டிருக்கிறது. ஆனால் அதைப் பெற்றுக் கொள்ளும்படியாக ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

சினேகிதரே அழைப்புக்கு நீங்கள் பதில் அளித்து விட்டீர்களா? தேவனுடைய பெரிதும் பயங்கரமான நாளிலே நிற்க பாத்திரவான்களாகும்படி கிறிஸ்துவின் நீதியை தரித்து கொண்டீர்களா? தாமதப்படுத்தாதீர்கள் இரட்சிப்பு காத்திருக்கிறது ■

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**ஆயர். W.S. வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227, சர்ச் தெரு, கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

ஒருவன் தாகமாய் இருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன் யோவான் 7 : 37

உள்ளார்ந்த மனுஷனில் வாஞ்சையாய் இருக்கிற யாவருக்கும் தேவன் இன்று அழைப்பை தருகிறார். நித்தியத்தைக் குறித்த ஆழமான வாஞ்சை உள்ளோர். நாம் இரட்சிக்கப்படும்படி தேவனால் அழைக்கப்பட்டதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். தேவனுடைய கிருபையானது, எல்லா மனுஷர்மேல், அவர்கள் விசுவாசத்தில் வளரும்படி திரும்ப வேண்டும் என வாஞ்சிக்கிறது.

இந்த இதழின் தலைப்பு தெரிந்து கொள்ளப்படுதலும் சுதந்திரமும். நூற்றாண்டுகளாக விவாதத்திற்குள்ளான இந்த தலைப்பை தழுவிய மற்ற காரியங்களிலும் கேள்விகளும் உண்டு. கால்வின் இறையியல் கொள்கையானது முடிவில்லா தெரிந்து கொள்ளப்படுதல், பாவ நிவாரணம், மறக்க முடியாத கிருபை, சகல பரிசுத்தவான்களின் பிரயாசம் – அழகான ரட்சிப்பை சிதைக்கிறது இந்த இறையியல் போதனைகளானது தேவனுடைய மேலான இரட்சிப்பின் மேன்மையை விலகச் செய்கிறது.

தவறுகளை சுட்டிக்காட்டி, மறுப்பதை விட, உண்மையான சத்தியம் என்ன என்பதை வலியுறுத்த உள்ளேன். வேதாகமம் முழுவதும் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இரட்சிப்பு எல்லோருக்குமானது தவறான போதனையை எதிர்க்க சரியான வழி சத்தியமே தேவனுடைய வார்த்தையை பகுத்து, ஆராய்ந்து அறியும்போது, எது சரி, எது தவறு என்று புரிந்து கொள்ள முடியும். வேதத்தின் வார்த்தைகளுடன் இசைந்து சொல்லப்படுகிற போதனைகளே சரியானவை புதிய ஏற்பாட்டின் அஸ்திபாரமே இரட்சிப்பு – எல்லாருக்குமானது, ஒரு சிலருக்கானது அல்ல. தேவன் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் கொடுத்துள்ளார்.

தேவன் இஸ்ரவேலரோடு பண்ணின உடன்படிக்கையானது புதிய ஏற்பாட்டின் சபைக்கு மாற்றப்பட்டிருப்பதை தெரிந்து கொள்ளப்படுதல் என்று அநேக வேத சத்தியங்களில் காண முடிகிறது. சற்று விரிவாக பார்க்கையில் தான் புரிகிறது, தனிப்பட்ட ஆத்தும இரட்சிப்பை பற்றி அல்ல, கிறிஸ்துவின் மூலமாக மீட்பு எல்லோருக்கும் ஆனது என விளங்கிக் கொள்ள முடிகிறது.

கிறிஸ்து எல்லோருக்காகவும் மரிக்கவில்லை என்பது என்ன ஒரு துயரமான சமரசமான செய்தி. அவருடைய இரத்தம் அவரால் முன்குறிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே, தேவனை துதியுங்கள், தேவ கிருபை உங்களையும் என்னையும் ஆண்டு கொண்டுள்ளது. தேவனுடைய அனாதி அன்பினால் இரட்சிப்பின் வரத்தை ஏற்றுக் கொள்ளும் சுதந்திரத்தை அவர் நம்மிடமே கொடுத்திருக்கிறார்.

ஒரே தலைப்பில் இதை முற்றிலுமாக விவரிக்க முடியாது. சரியான அஸ்திபாரம் போடப்பட்டதை நம்புகிறோம். தேவனுடைய ஆவியானவரே, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை வழிநடத்தி நிலை நிறுத்துவாராக.

ஆன்லைனில்

**அதிகமாக தெரிந்துகொள்ள**

www.thegospeltruth.org

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**

**தொடர்புடைய காஸ்பெல் ட்ருத் இதழ் 28 நித்தியபாதுகாப்பு**



### தேவன் முன்னதாகவே எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் எனில்

நம்முடைய சுதந்திரத்தில் அர்த்தம் இல்லையா?

இல்லை. அவர் கர்த்தர். எல்லாம் அறிந்தவர். நம்மை சிருஷ்டித்தவர். ஆகவே அவர் முன் குறித்தபடி நம்முடைய முடிவுகள் இருக்கும் என்று அர்த்தமில்லை தீர்க்கதரிசனமாக வரும் காலத்தில் நம் வாழ்வின் நிகழ்வுகள் சொல்லப்பட்டாலொழிய வேறு எப்பவும் நடக்கும் நிகழ்வுகளெல்லாம் அவர் நமக்கு என்று ஞானத்தையும் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தையும் கொடுத்திருக்கிறார்.

வேதத்தில் உள்ள தீர்க்கதரிசனங்கள் – தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் மனுஷனுடைய சித்தத்தை வெளிப்படுத்தும் நோக்கமல்ல, துவக்கமும், முடிவும் எல்லாம் அறிந்தவர் அவர். மனுஷனுடைய வாஞ்சையின் சுதந்திரத்தை பாதிக்காமல் தேவன் இறையாண்மையுடன் கூடிய தெய்வீக வல்லமையையும் முன் குறித்தபடி தீர்மானித்திருக்கிறார்.



# வேதபாட வழிகாட்டி

## தெரிந்து கொள்ளப்படுதலும் சுதந்திரமும்

இறையாண்மை, கிருபை தெரிந்து கொள்ள கூடுதல் இரட்சிப்பு

**வேத வாசிப்பு :** நான் ஜீவனையும் மரணத்தையும் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியும் இன்று சாட்சியாக வைக்கிறேன்; ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனை தெரிந்து கொண்டு உபா 30 : 19

**வரையறை :** தேவன் நாம் தெரிந்து கொள்ளும்படியாக நமக்கு முன்வைக்கும் காரியங்கள் இது தேவனுடைய கிருபைக்கும், முன் அறிவுறுத்தலுக்கும் பிணைக்கப்பட்டது. வற்புறுத்தலினாலோ அல்லது பாரபட்சமுள்ளதாகவோ இல்லை.

**செய்திச் சுருக்கம் :** தேவனுடைய கிருபையினால் அருளப்படுகிறவைகளுக்கும் தேவன் மனுஷனுக்கும் அளித்த சுதந்திரமும் தொடர்புடையது. இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் தேவன் முன்குறித்த இரட்சிப்பின் திட்டத்தை எல்லாருக்கும் தந்தரினார். அவர் நம்மை அழைத்த அழைப்புக்கு நாம் பதில் அளிக்க வேண்டும்.

### I.தேவனுடைய அதிகாரம்

A. ஏசா 46 : 9 – 10 தேவனுடைய ஆலோசனை நிலை நிற்கும்
B. தானி 4 : 35 அவர் தமது சித்தத்தின்படியே நடத்துகிறார்

### II. சர்வ லோகத்தின் இரட்சிப்புக்கான மாபெரும் அழைப்பு

A.யோவான் 3 : 16 – 17 தேவன் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.
B. 1 தீமோ 2 : 4 எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும்அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்
C. 2 பேது 3 : 9 ஒருவரும் கெட்டுப் போகக் கூடாதென்று விரும்பி
D. மத் 11 : 28 என்னிடத்தில் வாருங்கள்
E. வெளி 22 : 17 தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்

### III. கிறிஸ்து எல்லாருக்காகவும் மதித்தார்

A. 1 தீமோ 2 : 6 எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்தார்
B.1 யோ 2 : 2 சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்
C. எபி 2 : 9 ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படி
D. 2 கொரி 5 : 15 அவர் எல்லாருக்காகவும் மரித்தார்
E. யோ 1 : 29 உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி

### IV.கிருபையினாலே, விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்

A. எபேசி 2 : 8 – 9 கிருபையினால் விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது கிரியையினால் உண்டானதல்ல
B. தீத்து 2 : 11 – 12 எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபை
C. ரோமர் 3 : 24 இலவசமாய் அவருடைய கிருபையினாலே நீதிமான்களாக்கப்படுகிறார்கள்
D. அப் 15 : 11 இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் இரட்சிக்கப்படுவோம்

### V. சுதந்திரமும், தெரிந்தெடுத்தலும்

A. உபா 30 : 19 மரணமா ஜீவனா என்பதை நீ தெரிந்து கொண்டு
B. யோசு 24 : 15 யாரை சேவிப்பீர்கள் என்று தெரிந்து கொள்ளுங்கள்
C. எபி 3 : 15 இருதயங்களைக் கடினப்படுத்தாதீர்கள்
D. ரோமர் 6 : 16 எதற்குக் கீழ்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்கள்
E. 2 பேது 1 : 10 உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாகும்படி

### VI. கிருபையும் ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும்

A. வெளி 3 : 20 ஒருவன் என் சத்தத்தை கேட்டு
B. 2 கொரி 6 : 1 தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய் பெறாதபடிக்கு
C. மத் 23 : 37 கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன். உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று
D. அப் 7 : 51 பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்கிறீர்கள்
E. எபி 5 : 9 தமக்கு கீழ்படிகிற யாவருக்கும் இரட்சிப்பு
F. அப் 24 : 25 பேலிக்ஸ் பயமடைந்து, சமயமானபோது உன்னை அழைப்பேன் என்றான்

### VII.தீர்மானத்தின்படி, நமக்கு அருளப்பட்ட கிருபை

A. 2 தீமோ 1 : 9 ஆதிகாலமுதல் நம்மை இரட்சித்தது
B. எபே 1 : 4 – 7 அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்து கொண்டபடியே
C. எபே 1 : 10 – 11 அவருடைய தீர்மானத்தின்படி நாங்கள் முன்குறிக்கப்பட்டு
D. ரோம 8 : 28 – 30 அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்...தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார் நீதிமான்களாக்கியுமிருக்கிறார்.
E. அப் 4 : 12 அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை
F. 2 தெச 2 : 13 ஆதி முதல் தேவன் உங்களை தெரிந்து கொண்டபடியே
G. 1 பேது 1 : 2 தேவனுடைய முன்னறிவின்படியே தெரிந்துகொள்ளப்பட்ட
H. யோவான் 1 : 11 – 13 அவர்கள் மாம்ச சித்தத்தினால் அல்ல
I. ரோமர் 11 : 5 – 7 கிருபையினால் உண்டாகும் தெரிந்து கொள்ளுதல்

**முடிவு :**

ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.

– வெளி 22 : 17

# கிருபையினாலே உண்டாகும் தெரிந்து கொள்ளப்படுதல்

## *தேவனுடைய அதிகாரமும், சுதந்திரத்தின் ஈவும்*



**தேவன் எல்லோரையும் இரட்சிப்புக்கு என்று அழைத்திருக்கிறார். ஆனால் எல்லோரும் செவி சாய்ப்பதில்லை. எப்படி தெய்வீக அதிகாரமும் மனுஷனுடைய தெரிந்து கொள்ளுதலும் ஒன்றாகும்? கிருபையினாலே தெரிந்து கொள்ளப்படுதல் தேவனுடைய அதிகாரத்தை குறிக்கிறது. ஆயினும் ஒவ்வொரு ஆத்துமாவும் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பதிலளிக்கடவோம்.**

### இரட்சிப்புக்கான தேவனுடைய அனாதி திட்டம்

**மனுக்குலமானது தேவசித்தத்திற்கு மாறாக தனக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை பயன்படுத்தியது தேவனுடைய படைப்பிலே மனுஷனுக்கான சுதந்திரத்தை சுதந்திரத்தோடே, வழியை தெரிந்து கொள்ளும் வாய்ப்பை அவர் நம்மிடமே கொடுத்திருக்கிறார்.**

தேவனே எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரம் கொண்டவர். ஆகவே அவருடைய சித்தம், நோக்கம், திட்டம் மீறப்படக்கூடாது. தீர்க்கதரிசி ஏசாயா உரைத்தபடியே, என் ஆலோசனை நிலை நிற்கும். எனக்கு சித்தமானவைகளை யெல்லாம் செய்வேன். (ஏசா 46 : 10). தேவன் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றும்படி ஞானத்தோடு வழிநடத்துகிறார். தானியேல் தீர்க்கதரிசி கூறியபடி, அவர் தமது சித்தத்தின்படி நடத்துகிறார். அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி என்ன செய்கிறீர் என்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன் (தானி 4 : 35).

இரட்சிப்புக்கான தேவ திட்டமும் இதில் அடங்கும். பூர்வ காலமுதலே, தேவன் மனிதனை மீட்க சித்தங் கொண்டிருந்தார். இரட்சிப்பு என்பது தற்செயலாக நடப்பது இல்லை தேவனுடைய மீட்கும் திட்டம் எல்லோருக்கும் ஆனது.

### சர்வலோகத்திற்குமான அழைப்பு

நற்செய்திதான் சர்வலோகத்திற்குமான அழைப்பு தேவன் தமது ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ(யோ 3 : 16) என்று சொல்லி சர்வ லோகத்தின் ஜனங்களையும் நேசிப்பதினால் கூறி இருக்கிறார். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும் 1 தீமோ 2 : 4. பேதுரு தேவ சித்தத்திற்கேற்ப ஒருவரும் கெட்டுப்போகாமல், எல்லாரும் மனம்திரும்ப வேண்டுமென்று விரும்புகிறார். 2 பேது 3 : 9 விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன் வெளி 22 : 17. யோவான்ஸ்நானகன் உரைக்கையில் இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டு குட்டி என்கிறார் யோவான் 1 : 29. மன்னிப்பு என்பது ஒரு சிலருக்கு மாத்திரமல்ல எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே 1 தீமோ 2 : 6 சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். 1 யோவான் 2 : 2 அவர் எல்லாருக்காகவும் மரித்தார் 2 கொரி 5 : 15 ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார் எபி 2 : 9 ஒருவரும் விடுபடவில்லை.

### கிருபையினாலே கிடைத்த இரட்சிப்பு

இலவசமாய் கிடைத்ததும் இரட்சிப்பு என்பது தானாக சர்வ லோகத்திற்கும் கொடுக்கப்படுவதில்லை. ஏனெனில் கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது கிரியையினால் உண்டானதல்ல எபேசி 2 : 8 – 9 இரட்சிப்பு என்பதுநம்முடைய நிலைமை கிரியைகள் வம்ச வழி இவைகளினாலல்ல கிருபையினாலே மட்டுமே. இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கக்கப்படுகிறீர்கள் ரோம 3 : 24. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறதோ அப் 15 : 11 ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது தீத்து 2 : 11 – 12.

### சுதந்திரத்தின் அதிகாரம்

எல்லாருக்கும் மீட்பை அளிப்பதே தேவசித்தம். அதற்காகவே கிறிஸ்து மரித்து தேவத்திட்டத்தை நிறைவேற்றினார். தாமே தெரிந்து கொள்ளும் சுதந்திரத்துடன் மனுக்குலத்தை அவர் எல்லாவற்றிற்கும் மேலாய் இருந்து சிருஷ்டித்தார். ஆனால் மனுக்குலமானது தேவசித்தத்திற்கு மாறாக தனக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை பயன்படுத்தியது தேவனுடைய படைப்பிலே மனுஷனுக்கான சுதந்திரத்தை சுதந்திரத்தோடே, வழியை தெரிந்து கொள்ளும் வாய்ப்பை அவர் நம்மிடமே கொடுத்திருக்கிறார்.

ஆகவே தான் நான் ஜீவனையும் மரணத்தையும் உனக்கு முன்வைத்தேன் நீ பிழைக்கும்படி ஜீவனை தெரிந்துகொள் உபா 30 : 19. அதுபோலவே, யோசுவா ஜனங்களை நோக்கி யாரை சேவிப்பீர்கள் என்று தெரிந்து கொள்ளுங்கள் என்று எச்சரிக்கிறார் யோசுவா 24 : 15. தெரிந்து கொள்ளுதல் இல்லாவிடில், உண்மையான ஆராதனையும் அன்பும் இருக்காது.

எபி 3 : 15 வலியுறுத்தப்படுவது யாதெனில் இன்று அவருடைய சத்தத்தை கேட்பீர்களாயில் உங்கள் இருதயங்களை கடினப்படுத்தாதீர்கள். சுதந்திரமான மாம்சீக மனிதர்களாகிய நாம் தேவ சத்தத்திற்கு கீழ்படிகிறோமா அல்லது மீறுகிறோமா என்பதே முக்கியம். எதற்கு கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்படிகிற அடிமைகளாய் இருக்கிறீர்கள் ரோமர் 6 : 16. ஒவ்வொருவரும் அவர்களுடைய ஆத்துமாவுக்கு உத்தரவாதி, பேதுரு கூறுகையில் உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள் 2 பேது 1 : 10. சுதந்திரம் இல்லாவிடில், எச்சரிக்கை தேவையில்லை.

### கிருபையைப் பெற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும்

தேவனுடைய திட்டத்திற்கு மனுஷன் தெரிந்து கொள்ளும் வழிகள் முரண்பட்டிருப்பதால் தேவ திட்டம் பெலமற்றது என்று எண்ணி விடாதீர்கள் அவர்கள் அதை மெய்ப்பித்து விட்டார்கள். தேவனுடைய அதிகாரமும் ஆட்சியும் கிருபையினால் வருகிற இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் சுதந்திரத்தை உங்களிடமே தருகிறது. ஒவ்வொரு வாசற்படியில் நின்று கிறிஸ்து இதயக்கதவை தட்டி ஒருவன் என் சத்தத்தை கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து வெளி 3 : 20. இரட்சிப்பு என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய் பெறாதபடிக்கு 2 கொரி 6 : 1. எருசலேமை நோக்கி இயேசு உன் பிள்ளைகளை கூட்டி சேர்த்துக்கொள்ள மத் 23 : 37. அவர்களுடைய இரட்சகராய் இருக்க சித்தம் கொண்டுள்ளார். ஆனால் அவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஸ்தேவான் பிரதான ஆசாரியர்களை நோக்கி நீங்கள் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள் என்றான் அப் 7 : 51.



**தேவனுடைய அதிகாரமும் ஆட்சியும் கிருபையினால் வருகிற இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் சுதந்திரத்தை உங்களிடமே தருகிறது. தேவனை விசுவாசிக்கிறவர்களே தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்**

பேலிக்ஸ் மனம் திரும்புதலுக்கு நேராக நடத்தப்படும்படியாக பவுல் பேசுகையில் பயமடைந்தான் அப் 24 : 25. இயேசு தாம் பூரணரான பின்பு தமக்கு கீழ்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணராகினார் எபி 5 : 9. தேவன் நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். இரட்சிப்பை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் அவரவர் வாய்ப்பு.

### கிருபையினால் தெரிந்து கொள்ளுதல்

இரட்சிப்பு எல்லோருக்குமானது. ஒவ்வொருவரும் அதற்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வேதம் தெளிவாக தெரிந்து கொள்ளப்படுதலைக் குறித்து கூறுகிறது. கிருபையினாலே இரட்சிக்கப்பட முடியும். தேவனுடைய அழைப்பும், மனுஷனுடைய கிரியையும், தேவனுடைய முன் அறிவிப்பின்படியே அவருடைய நித்திய நோக்கம் நிறைவேறும் படியான வழியில் செயல்பட வேண்டும். இரட்சிப்பு என்பது நாம் நினைத்தால் பெற முடியாது. மாறாக அது தெய்வீக திட்டமாக முன் குறிக்கப்பட்டது. தேவனுடைய மீட்கும் திட்டம் பெரிதானது. பவுல் எழுதுகையில் அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல் தம்முடைய தீர்மானத்தின்படியும் ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்தார் 2 தீமோ 1 : 9. சிருஷ்டிப்பிற்கு முன்பே, தேவன், இயேசு கிறிஸ்துவின் வழியாக நிறைவேற்ற போகிற தெய்வீக திட்டத்தை தீர்மானம் பண்ணினார். கீழ்ப்படிதலும் விசுவாசமுமே இரட்சிப்பை கொண்டு வரும்.

### முன் தீர்மானித்தல்

எபேசி 1 : 4 – 5 வசனங்களில், உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்து கொண்டபடியே இயேசு கிறிஸ்து மூலமாய் தமக்கு சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார். விசுவாசத்தினால் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் யாவரும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் வசனம் 11ல் கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாக இருந்த நாங்கள் அவருடைய மகிமைக்கு புகழ்ச்சியாயிருக்கும்படி – அவருடைய தீர்மானத்தின் படியே நாங்கள் முன் குறிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்திரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்.

கிறிஸ்துவுக்கு கீழ்படிகிற யாவருக்கும் அவருடைய தீர்மானம் பெரியது. இரட்சிப்பு என்பது ஒரு சாராருக்கு மட்டுமல்ல பவுலுடைய நிருபங்கள் முழுவதிலும் இரட்சிப்பு என்பது யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் பொதுவானது என்று எழுதுகிறார் ரோமர் 8 : 28 –30 தேவன் எவர்களை முன் அறிந்தாரோ, எவர்களை முன் குறித்தாரோ என்று சொல்லப்பட்டிருக்கிறது நற்செய்தியின் அழைப்பானது கிறிஸ்து வெளிப்படும் முன்னே எல்லாருக்குமான ஒன்றாக தீர்மானிக்கப்பட்டு விட்டது. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை;

நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான். அப் 4 : 12. யாரெல்லாம் விசுவாசிக்கவேண்டும் என்று அவர் முன்குறிக்கவில்லை.ஆனால் விசுவாசிக்கிற யாராயிருந்தாலும் இரட்சிக்கப்படுவார்கள். 2தெச 2 : 13 சொல்கிறது, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும் சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு ஆதி முதல் தேவன் உங்களைத் தெரிந்து கொண்டபடியினாலே தேவனுடைய தெரிந்து கொள்ளுதல் மனுஷனுடைய தெரிந்து கொள்ளுதலும் தனிப்பட்டதல்ல விசுவாசிக்கிறவர்களே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். பேதுரு உறுதிப்படுத்தி 1 பேது 1 : 2 ல் பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே தெரிந்து கொள்ளப்பட்டோம் என்று கூறியிருக்கிறார். தம்மை விசுவாசிக்கிற யாவருக்கும் இரட்சிப்பு என்பது நிச்சயம் யூதர்கள் மற்றும் புறஜாதியார்கள் முன் தீர்மானிக்கப்பட்டும் தெரிந்து கொள்ளப்பட்டதுமான இரகசியத்தின் வெளிப்பாடு வம்சாவழியோ அல்லது குறிப்பிட்ட தேசத்தாருக்கும் மாத்திரமல்ல.அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை (யோவா 1 : 11–13). விசுவாசத்தை கைக்கொண்டு கிருபையினால் தேவனுக்கு புத்திரராக இருக்கிறோம்.

### தெரிந்து கொள்ளும் பொறுப்பு உங்களுடையது

ரோமர் 11 : 5 பவுல் இவ்வாறாக கூறி முடிக்கிறார். அப்படிப்போல இக்காலத்திலும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்து கொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாய் இருக்கிறது தேவனுடைய திட்டத்தின்படி கிருபையினாலே விசுவாசிக்கிறவர்களே, தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். நற்செய்திக்கு கீழ்ப்படிந்து கிருபையினாலே தெரிந்து கொள்ளப்படுகிறோமே தவிர, ஒரு பிரிவினருக்கு மாத்திரம் முன் தீர்மானிக்கப்பட்டதில்லை அழைப்பு சர்வ லோகத்திற்குமானது. அழைப்புக்கு ஜாக்கிரதையாக இருக்கிறவர்கள் தான் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். கிருபையினாலே தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவனுடைய அதிகாரத்திற்கும் வல்லமைக்கும் கீழ்ப்படிந்து விசுவாசித்து தேவத்திட்டத்தை நிறைவேற்றுகிறவர்கள். திட்டம் தேவனுடையது, தியாகப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டார். இரட்சிப்பு இலவசம். இப்பொழுது தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு உங்களுடையது. ■

# கேள்வி ? பதில்!

**மனுஷனுடைய சுபாவம் கேடுள்ளதாயிருக்க, எப்படி ஒருவரால் தேவனை தேடவும், தெரிந்து கொள்ளவும் முடியும்?**

எரேமியா தீர்க்கதரிசி, விழுந்துபோன மனுஷனுடைய நிலையைக் குறித்து எல்லாவற்றை பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகாகேடுள்ளதுமாய் இருக்கிறது அதை அறியதக்கவன் யார்? எரே 17 : 9 பவுல் ரோ 3 : 10 நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என்கிறார் வசனம் 12ல் நன்மை செய்கிறவன் இல்லை ஒருவனாகிலும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது. இரட்சிப்புக்கு முன்பு ஒவ்வொரு மனுஷனும் துன்மார்க்க நிலைமையில் இருந்தான். அப்படியானால் மனுஷனை நல்வழிப்படுத்த முடியாது என்று அர்த்தமில்லை. ஆனால் அவன் கர்த்தருக்கு முன்பதாக உத்தமனாக இல்லை. எல்லோக்கும் இரட்சிப்பு அவசியமாயிற்று. ரோமர் 3ல் யூதர்களை குறித்து பவுல் புறஜாதிகளை குற்றம்சாட்ட அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்பதற்காக எல்லோருமே வழி விலகி பாவத்தில் இருக்கிறார்கள் என்றால் இரட்சிப்பு இல்லாமல் தேவனுக்கு பரிசுத்த குலச்சலாய் நிற்கிறோம். வசனம் 11-ல் பவுல் கூறுகையில் தேவனை தேடுகிறவன் இல்லை என்கிறார்.

மீண்டும் ஒரு கேள்வி எலும்புகிறது துன்மார்க்கமாய் வாழும் பாவியான ஒரு மனுஷனால் எப்படி தேவனை தேட முடியும் இயேசு இதற்கு நேரடியாக பதிலளிக்கிறார். என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டில் அவன் என்னிடத்தில் வரமாட்டான் யோவான் 6 : 44 ஜென்மசுபாவமுள்ள மனுஷனை பரிசுத்த ஆவியானவரால் தான் தன்னிடமாய் இழுத்துக் கொள்ள முடியும். தேவனுடைய கிருபை இல்லாமல் ஒருவரும் தேவனை தேட மாட்டார்கள். நற்செய்தி என்னவென்றால் இந்த இழுத்துக்கொள்ளும் கிருபையானது எல்லோரையும் சென்றடையும்.

இயேசு பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் வரும்போது பாவத்தை குறித்தும், நீதியை குறித்தும், நியாய தீர்ப்பை குறித்தும், உலகத்தை கண்டித்து உணர்த்துவார் யோ 16 : 8 என்றார். மேலும் நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன். யோ 12 : 32 . யோவான் 1 : 9 இயேசுவை குறித்து யோவான் எழுதுகையில் உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி என்றார்.

முன் குறிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் இந்த பாவ உணர்வை விட்டு விலகி மனம் திரும்பும்படி அழைத்துக் கொள்ளும் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. மாறாக அது எல்லோருக்குமானது இயேசு இழந்து போனதை தேடவும் இரட்சிகவுமே வந்தார். லூக் 19 : 10. தேவனே ஆதியும் அந்தமுமானவர் அவர் அழைக்கிறார், பாவ உணர்வை தூண்டி மனந்திரும்ப வைக்கிறார். இழுத்துக் கொள்கிறார், பிரகாசிக்க செய்கிறார், ஆனாலும் பாவியானவன் ஒன்று அவரை விசுவாசிக்க வேண்டும். இல்லையெனில் அவருடைய கிருபையை இழந்து போக நேரிடும். ஒவ்வொருவரை இழுத்துக் கொள்ள வேண்டியதாய் உள்ளது தேவனுடைய சிறு விருப்பத்தை கூட நாமே தாமாக செய்ய முடியாதவர்களாய் காணப்படுகிறோம் இதுதான் அவர்கள் கிருபைக்கு அடையாளம்.

**நீங்கள் என்னை தெரிந்து கொள்ளவில்லை நான் தான் உங்களை தெரிந்து கொண்டேன் என்று இயேசு கூறியதில் இரட்சிப்பு என்னும் தருணம் நமக்கு கொடுக்கப்படவில்லையா?**

இல்லை இரட்சிப்பு என்பது இலவசம் ஆனால் யாரையும் வற்புறுத்தவில்லை விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் பெற்றுக் கொள்ளக்கடவன் வெளி 22 : 17. நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். யோவான் 15 : 16. தெரிந்து கொள்ளுதல் எனும் அதே வார்த்தை மூல வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தையை தியானிக்கையில் சொல்லப்பட்டுள்ள தருணம் மிக முக்கியம். இந்த இடத்தில் இயேசு தம் சீஷர்களிடத்தில் பேசுகிறார் உலகம் எங்கும் போய் சுவிசேஷத்தை பிரசிங்கிக்கும்படி அவர்களை அழைத்து அபிஷேகிக்கிறார். அவர்களுடைய அழைப்பும் ஆவிக்குரிய வரங்களும் தாமாக அவர்களுக்கு கிடைக்கவில்லை அவைகள் தேவனால் அருளப்பட்டவை. இரட்சிப்புக்கான அழைப்பு சர்வலோகத்திற்குமானது. அதே சமயம் சீஷர்களை சுவிசேஷத்திற்கு அழைத்து அபிஷேகப்படுத்தி தெரிந்து கொள்வது வேறு ஆகவே இரட்சிப்பில் மனுஷனுடைய தெரிந்து கொள்ளுதல் மறுக்கப்படவில்லை. ■

**ரோமர் 9ல் போதித்திருக்கிறபடி எவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் எவர்கள் ஜீவனை இழந்து போக வேண்டும் என்பதை தேவனே தெரிந்து கொண்டுள்ளாரா?**

இல்லை ரோமர் 9ல் தேவன் சர்வ அதிகாரம் படைத்தவராகையால் எவரையும் ஆசீர்வதிக்கவும் எவரை மீட்கவும் வல்லமை உடையவர் என்று சொல்லப்பட்டுள்ளது. தேவனிடத்தில் அநீதி இல்லை. யாக்கோப்பை சிநேகித்து ஏசாவை வெறுத்தேன் என்று எழுதி இருக்கிறது (வசனம் 13) யாக்கோபு, ஏசா என்னும் தனிப்பட்ட நபர்களை அங்கே குறிப்பிடவில்லை மாறாக அவர்களுடைய சந்ததியாரைதான் குறிப்பிட்டுள்ளோம். அவர்கள் தேசங்களையும் கர்த்தருடைய திட்டத்தில் அவர்கள் பங்கு எடுக்காமல் தேவ நீதியை புறக்கணித்ததையும் நாம் காண முடிகிறது. ஆவிக்குரிய பிறப்பில்தான் தெரிந்து கொள்ளுதல் தீர்மானிக்கப்படுகிறதேயல்லாமல் யூத மார்க்கத்தின் பிறப்பினை சார்ந்ததல்ல. யாக்கோப்பையும் அவன் சந்ததியும் தேவன் தன்னுடைய மேலான அதிகாரத்தினாலும், வல்லமையினாலும் ஆசீர்வதிக்கிறார். ஏனெனில் அவர் தேவன். அவரிடத்தில் அநீதி உண்டென்று சொல்லக்கூடாது.
எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாய் இருப்பேனோ அவன் மேல் இரக்கமாய் இருப்பேன். (வ 15) அது தேவனுடைய விருப்பம். மேலும் மற்றொரு வேத வசனத்தில் அவர் எல்லோருக்கும் இரக்கத்தையும் இரட்சிப்பையும் தர வல்லவராயிருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது ஆகையால் இரங்குகிற தேவனாலேயாம் (வ 16) மனுஷனால் கூடாது. இரட்சிப்பு என்பது தேவனால் கிடைப்பது. என்பது அடிக்கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. ரோம 9, அவருடைய இரக்கத்தை நீட்டிக்க அவருக்கு அதிகாரம் உண்டு என்பதை எடுத்துரைக்கிறது. இன்னும் ஒரு எச்சரிப்பு யாதெனில் யாராவது விடாப்பிடியாக தேவனுடைய இடைபடுதலை நிராகரித்துக் கொண்டே இருக்கிறார்களோ அவர்களை விட்டு தேவன் தம்முடைய இரக்கத்தை விலக்கி அவருடைய இருதயத்தை கடினப்படுத்தி விடுவார்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**

**உங்களுக்குத் தெரியுமா?**

இரட்சிப்பை குறித்த கால்வினின் கொள்கை மற்றும் ஆர்மேனிய கொள்கை என இருவேறு இறையியலாளர்களின் கருத்துக்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்டு வந்தது. கால்வினின் கொள்கை என்பது ஜான் கால்வின் ( 1509 – 1564 ) என்பவரால் தேவனுடைய இறையாண்மை முன் குறிக்கப்படுதல் அதாவது நித்திய ஜீவனுக்கென்று தேவன் சிலரை மட்டும் தெரிந்து கொள்கிறார் என்கிறார். அர்மேனிய கொள்கை என்பது ஜேக்கப் அர்மனியஸ் (1560 – 1609) என்பவரால் மனிதனுக்கு தேவன் தரும் சுதந்திரம், தேவ கிருபையை ஏற்கவும் புறக்கணிக்கவும் தரும் சுதந்திரம் இவைகளை வலியுறுத்துகிறார். தெரிந்து கொள்ளப்படுதல் கிருபை இவை எல்லாம் பல நூற்றாண்டுகளாக விவாதத்திற்குள்ளாக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். மத்தேயு 11 : 28.

*ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை*

## அழைப்பை ஏற்றுக்கொள்ளுதல்
## தேவன் இன்னும் உங்களை அழைக்கிறார்

அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா; லூக் 14 : 23.



வேறுபாடுகள், மறுப்புகள், நிராகரிப்புகளை சந்தித்து சுவிசேஷத்தை அறிவிப்பது என்பது உற்சாகத்தை இழக்கச் செய்யும். இயேசு இந்த அனுபவத்திற்குள்ளாக கடந்து சென்றது போல நாமும் சந்திக்கிறோம். ஆயினும் தேவன் இன்னும் நம்மை அழைக்குபடி அனுப்பிய மாபெரும் அழைப்பு முடிவடைந்து போகவில்லை. கிருபையின் வாசல் அடைபடவில்லை. நம்முடைய கடமை யாரெல்லாம் செவிசாய்க்கிறார்கள் என்று முடிவு எடுப்பதில்லை மாறாக விசுவாசத்துடன் அந்த அழைப்பை மற்றவர்களுக்கும் பயன்படும்படி செய்து சுவிசேஷ அழைப்பை ஏற்க வேண்டும். பவுலின் ஊழியத்திலும் கூட சில ஏளனங்கள், சில தாமதங்கள் அதிலும் சில விசுவாச கூட்டத்தார் இப்படித்தான் இருந்தார்கள். முடிவு வேறு விதமானது ஆனால் அழைப்பு ஒருபோதும் மாறாதது தொடர்ந்து பிரசங்கியுங்கள், தொடர்ந்து அன்பு கூறுங்கள், தொடர்ந்து ஊழியம் செய்யுங்கள், தொடர்ந்து அழையுங்கள். ஆம் என்று சொல்லக்கூடிய இருதயங்கள் அநேகம் உண்டு. மகா கேடுள்ள இருதயத்தாரும் கர்த்தரிடமாக திரும்புவார்கள் நீதியின் சால்வையை தரித்துக்கொள்ளும்படி சத்தியத்தின் மீது வாஞ்சையும் தவனமுமாயிருக்கிற ஆத்துமாக்களை நோக்கி நாம்

அவர்கள் கூட்டமாய் இரட்சிக்கப்படாவிட்டாலும் மனந்திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் நாம் விதைக்கிற விதை உடனடியாக கனி தருவதில்லை. ஆனாலும் நல்ல விதையாகிய சுவிசேஷத்தை விதைத்துக்கொண்டே இருக்க வேண்டும். அப்படி விதைக்கப்பட்ட விதை நல்ல நிலத்தில் விழுந்து பலன் வரும்போது அது நம்முடைய பேச்சுத் திறமை, செயல்திட்டம், ஞானத்தினால் வந்த பலன் இல்லை. இது தேவனுடைய கிருபையும், இரக்கமுமே இதனால் பயமின்றி இன்னும் அழைப்பை விஸ்தரிக்க நமக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதை உணர முடிகிறது, இயேசுவை பற்றி சொல்ல தயக்கம் காட்ட வேண்டாம். ஏனெனில் அவர் நமக்கு பயத்தின் ஆவியையோ பலவீனத்தின் ஆவியையோ கொடுக்கவில்லை. இவ்வுலகின் மாபெரும் வரம் இரட்சிப்பு. நியாய தீர்ப்பு நாள் நம் ஒவ்வொருவர் மேலும் வரும் ஜீவன் உள்ளவரை தேவனுடைய அழைப்பு இருந்து கொண்டே இருக்கும். அவர் இன்னும் நம்மை அழைக்கிறார் வழிச் சந்திகளிலும், வேலி அருகிலும் இருக்கிற ஒவ்வொருவரையும் அழைப்பது மிகவும் சவாலானது. இயேசு கிறிஸ்துவின் குணமாக்கும் வல்லமை ஆயிரம் பேருக்கு தேவை. ஒவ்வொரு ஆத்துமாவையும் சுவிசேஷம் சென்றடையும் வரை ஜெபிப்போம், போதிப்போம். ஒருவர் இரட்சிக்கப்பட்டால் எல்லாம் மகிமையும் தேவனுக்கே இந்த தெய்வீக பணியில் மாபெரும் மகிழ்ச்சி நமக்கு பிரதானமானது. தொடர்ந்து தேவன் நம்மை அழைத்துக் கொண்டே இருப்பது போல நாமும் மற்றவர்களை அழைப்போம்.■

CONTACT :-

**The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.**

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**THE CHURCH OF GOD** *Worship Place:*

**2 / 227 - Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**2 / 227, சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

**SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with Real Truth**

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 0091 95975 62641.

Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan

Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316